**நிரு** டியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்
கோண்டாவில்
DAY CLASSES
O/L DEC 1990
நடைபெறுகின்றன.
ஆங்கிலம் — பாலா
சமூகக்கல்வி— மஃறூப்
— வேலா
வர்த்தகம் — நவம்

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 99 செவ்வாய் 15 05-1990 (வைகாசி 01) ஷவ்வால் 19

**நிரு** டியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்
கோண்டாவில்
O/L DAY CLASS
DEC 1990
விஞ்ஞானம்—இரா, செல்வ வடிவேல்
கணிதம் —ரவி
தமிழ் )
சமயம் )—பண்டிதர்

## பயிலுநர் ஆசிரியருக்கு மட்டும் உணவு முத்திரை ரத்து அவரது குடும்பத்தினருக்கு முத்திரை கிடைக்கும்

பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் கிடைத்தவர்களுக்கு உணவு முத்திரைகள் ரத்து செய்யப்படும், ஆனால் அவரின் குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களுக்கு உணவு முத்திரை தொடர்ந்து கிடைக்கும்.

இதற்கான நடவடிக்கைகளை மட்டக்களப்பு சமூக சேவைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

பயிலுநர் ஆசிரியர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களின் குடும்பங்களின் உணவு முத்திரைகள் ரத்து செய்யப்படுவதால் அக்குடும்பம் பெரிதும் பாதிக்கப்படும் என்பது சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து பயிலுநர் ஆசிரியர்களுக்கு மட்டும் உணவு முத்திரையை ரத்து செய்து குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் உணவு முத்திரை பெற வழி செய்யப்பட்டுள்ளது. (05)

# பொருட்கள் விலைஉயர்வை தடுக்க விடுதலைப் புலிகள் நடவடிக்கை

## அத்தியாவசியப் பொருட்களுக்கு வரி இல்லை ஆனல் விலை கூட்டி விற்கிருர்கள் - மாத்தயா

**யாழ். மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலையை வர்த்தகர்கள் கூட்டி விற்பதைத் தடுக்க விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.**

யாழ் வர்த்தகர் சங்கக் கூட்டம் நேற்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தயா தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு திரு. டொமினிக்(யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர்) திரு. அன்ரன் பாலசிங்கம் (அரசியல் ஆலோசகர்), திரு. அருண் மாஸ்டர் (மாதிரி நிர்வாக மையப் பொறுப்பாளர்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

—8ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் சுற்றுலா சென்ற மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை

பல்கலைக்கழக நிர்வாகத்தின் அனுமதி பெறாது சுற்றுலாப் பயணம் சென்ற கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்படி பல்கலைக்கழக நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க விருப்பதாகத் தெரிய வருகிறது, இதற்கான தீர்மானம் அண்மையில் நடைபெற்ற மேற்படி பல்கலைக்கழக செனற்

— 8 ஆம் பக்கம் பார்க்க

# அரசு-ஈ.பி. ஆர். எல். எப். இன்று கொழும்பில் பேச்சு

இலங்கை அரசுக்கும் ஈ பி. ஆர். எல். எப். க்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இன்று காலை கொழும்பில் ஆரம்பமாகின்றது.

பாராளுமன்ற கட்டிடத்தில் உள்ள பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன்விஜேரட்னாவின் அலுவலகத்தில் இடம் பெறவுள்ள இப்பேச்சுக்களில் அரசு தரப்பில் ரஞ்சன்விஜே

—08 ஆம் பக்கம் பார்க்க

## கால்நடையைத் தேடிப்போய் காலை மிதிவெடியில் இழந்தார்

முல்லைத்தீவு, செம்மலை என்ற இடத்தைச் சேர்ந்த வீ. கதிரவேலு (59) என்பவர் மிதிவெடியில் சிக்குண்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் மேயப்போன மாடு திரும்பி வராததையிட்டுத் தேடிப்போனதாகவும் அப்பொழுது மிதிவெடி வெடித்ததில் ஒரு காற்பாதத்தை

— 8ஆம் பக்கம் பார்க்க

## பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு நஷ்டஈடு

கடந்தகால அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவருக்கு நஷ்டஈடுவழங்கப்படவுள்ளது. இதன் அடிப்படையில் ஒன்றிணைந்த உதவித்திட்டம், மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கான வருமான ஆதரவுத் திட்டம் என இரு திட்டங்கள் நடமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஒன்றிணைந்த உதவித்திட்டம் பற்றிய நூற்பிரதிகளைச் சிரேஷ்ட மாணவ

— 08ஆம் பக்கம் பார்க்க

## இன்ரசிற்றி ரயில் சேவை ஆரம்பிக்கும் சாத்தியம் இல்லை

கொழும்பு யாழ்ப்பாணம் வரையிலான இன்ரசிற்றி புகையிரத சேவை இபபோதைக்கு ஆரம்பிக்கப்படமாட்டாதென புகையிரத வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படிசேவைகளைநடத்துவதற்கு புகையிரதத் திணைக்களம் கொழும்பு தொடக்கம் அநுராதபுரம் வரைக்கும் பாதுகாப்புக் கோரி பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டபொழுது பாதுகாப்பு வழங்க

— 8 ஆம் பக்கம் பார்க்க

## வட-கிழக்குப் பட்டதாரிகளுக்கு நிர்வாக சேவைப் பதவி உயர்வு

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பொது நிர்வாக இணைந்த சேவையில் எழுதுவினைஞர்களாகவும் மற்றும் சாதாரண பதவிகளிலும் கடமையாற்றும் பட்டதாரிகள் நிர்வாகசேவைத்தரத்தில் உள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டக் கச்சேரிகளிலும், ஏனைய திணைக்களங்களிலும்நிர்வாக சேவை அதிகாரிகள் பற்றாக்

—8 ஆம் பக்கம் பார்க்க

## லண்டனிலிருந்து அமைச். ஹமீத் நேற்றுக் காலை வந்து சேர்ந்தார்

அமைச்சர் ஹமீத் நேற்றுக் காலை லண்டனிலிருந்து நாடு திரும்பியுள்ளார்.

இவர் இன்று நடைபெறவுள்ள ஈ. பி. ஆர். எல். எப் அரசு தரப்பு பேச்சுவார்த்தைகளில் சிலவேளைகளில் கலந்து கொள்ள மாட்டார் எனத் தெரியவருகிறது.

இதேசமயம் இன்னும் ஓரிரு நாட்களில் யாழ்நகரில் விடுதலைப்புலிகளைக் சந்திக்கவுள்ளார் எனத் தெரியவருகிறது.

## இறந்த ஓய்வுபெற்ற வடகிழக்கு உள்ளூராட்சி ஊழியருக்கு இன்னமும் ஓய்வூதியம் இல்லை

உள்ளூராட்சி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதன் பொருட்டுக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஆரம்ப விதி முறைகள் தொடர்பாக உள்ளூராட்சித்திணைக்களத்தினால் அண்மையில் புள்ளி விபரங்கள் சேர்க்கப்பட்டன.

விபரங்களை அவதானித்த போது ஏறக்குறைய எல்லா உள்ளூராட்சி மன்றங்களும் ஐந்து ஆண்டுக்கு முன்பு ஓய்வு பெற்றவர்கள், சேவைகாலத்தில் இருந்து இறந்தவர்கள்

—08ஆம் பக்கம் பார்க்க

## தனியார் கல்வி நிறுவனங்களை பதிவு செய்யுமாறு கோரிக்கை

யாழ் மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துவோர் இம்மாதம் 23-ம் திகதிக்கு முன்னர் தம்மிடம் பதிவு செய்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

கோண்டாவிலில் உள்ள தமது தலைமைக் காரியாலயத்தில் பதிவு செய்யுமாறும் கேட்டுள்ளனர்.

### தமிழீழத் தொழிற்சங்கக் கூட்டத்தில் மூர்த்தி உரை:-

# 'மக்களும் தொழிலாளரும் பிளவுபட்டால் உரிமைப் போராட்டம் பலவீனமடையும்'

தொழிலாளர் அனைவரும் ஒன்று சேருவதன் மூலமே எமது இலட்சியத்தை நோக்கி விரைவாகச் செல்லமுடியும். கடந்த காலங்களில் ஏமாற்றுக்காரர் நடத்திய அரசியல் வியாபாரம் தொழிற்சங்க வியாபாரங்களால் மக்களும் தொழிலாளர்களும் பல கூறுகளாகப் பிளவுபட்டு எமது உரிமைப் போராட்டம் பலவீனமடைந்திருந்தது. இன்று இந்நிலை மாறி மக்களும் தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து ஒரே குரலாக ஒலிக்கின்ற செயல்படுகின்ற பிரகாசமான சூழ்நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு தர்மபுரத்தில் உள்ள விடுதலைபுலிகளின் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழீழ தொழிற்சங்கங்களுக்கான கூட்டத்தில் உரையாற்றிய முன்னணியின் பிரதம அமைப்பாளர் பரமு-மூர்த்தி குறிப்பிட்டார்.

தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளான வில்லியஸ், கதிரேசு ஆகியோரும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மூர்த்தி தொடர்ந்து உரையாற்றுகையில்:

''இந்த நல்ல சூழ்நிலையை கொடுப்பதற்கு இதுவரையும் தமிழீழ முஸ்லிம் தொழிலாளர்களைப் பிரித்து வைத்திருந்த தென்னிலங்கைத் தலைமையைக்கொண்ட தொழிற்சங்க வியாபாரிகள் ஆயற்சி செய்து வருகிறார்கள் இந்நோக்கத்திற்காக எம்மீது பொய்யான குற்றச் சாட்டுகளையும் சுமத்தி வருகிறார்கள்,''

'இது குறித்து தமிழ், முஸ்லிம் தொழிலாளர்கள் விழிப்பாக இருக்க வேண்டும் தமிழீழப் பகுதியில் உள்ள தமிழ், முஸ்லிம் தொழிலாளர்கள் எமது தலைமையின்கீழ் அணிதிரள வேண்டும் ஒவ்வொரு தொழிற் கூட்டங்களிலும் அமையப் போகின்ற தொழிற்சங்க நிர்வாகம் நேர்மை நாட்டுப்பற்று வர்க்க உணர்வு திறமை ஆகிய அம்சங்களைக் கொண்டவர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.


## அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கபபட்ட முகவர்கள்)

196. கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

எமது நிறுவனத்தில் பலவிதமான திருமண அழைப்பிதழ் அட்டைகள். புதுமனைப்புகுவிழா அழைப்பிதழ் அட்டைகள், விருந்துபசார அழைப்பிதழ் அட்டைகள் அறிமுக அட்டைகள் அடிக்கும் அட்டைகள், பிறந்த தின மற்றும் சுபதின அழைப்பிதழ் அடிக்கும் அட்டைகள், இறக்குமதி செய்யப்பட்ட காகிதாதிகள், எழுது கருவிகள், மின்சார உபகரணங்கள், அச்சகங்களுக்குத் தேவையான வர்ணத் தீந்தைகள், மற்றும் இலங்கைக்கடதாசிக் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்யப்படும் சகலவிதமான கடதாசி வகைகள், மட்டைவகைகள், அன்பளிப்புப் பொருள்கள் யாவும் பெற்றுக்கொள்ளலாம்.

05086



## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

மீசாலையைச் சேர்ந்த சி. பா. மகேந்திரனுக்குச் சொந்தமான தேசிய புகையிரத சேவை அடையாள அட்டை புகையிரத போக்குவரத்து சேவை பாஸ் (Duty Pass) என்பன உட்பட Purse கடந்த 6ம் திகதி யாழ்-மீசாலைக்கும் இடையில் தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து Maxal House 20, Jubilee Bazar Jaffnaல் கொடுக்கவும் 05112

### தேவை

ஸ்ருடியோ டாக்றூம் வேலைக்கு ஆள் தேவை உடன் விண்ணப்பிக்கவும். தகுந்த வேதனம் கொடுக்கப்படும். அனிதா போட்டோ வல்வெட்டித்துறை (05109)

### புத்தகம்

A/L தாவரவியல், அல்காக்களும் பங்கசுக்களும்- ஓர் அறிமுகம். எழுதியவர் கலாநிதி அ. சிவபாலன். விலை ரூபா 35/- கிடைக்குமிடம், பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 05040



## COMPUTER COURSES

NEW BATCHES START ON:

| | | |
|---|---|---|
| D-BASE III + | 19. 05 1990 | 3. 00—4. 30 P. M |
| BASIC | 16. 05. 1990 | 9. 00—10. 30 A. M |

IDP COMPUTER CENTRE
342, K. K. S. Road, Jaffna
(சிவன் கோவிலடி)
BRANCH: I D P- 7th MILE POST, MALLAKAM

05102



## உதவித் தாதியர் பயிற்சிநெறி

## TRAINING FOR NURSES - AIDE

### 19-05-1990-இல் ஆரம்பமாகவுள்ளன

- தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N, O.) விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.
- பதினெட்டு மாத கால பாடத்திட்டங்கள்.
- ஆறுமாத கால செய்முறைப் பயிற்சிகள்
- செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ். நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்திய சாலையில் நடைபெறுகின்றன.
- அரச அங்கீகாரம்பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்,
- பாடத்திட்டங்கள் யாவும் தமிழ்மொழி மூலம் போதிக்கப்படுகின்றன.
- இலவச ''அக்கு பங்சர்'' பயிற்சிகள்.

ஆண் உதவித்தாதியர் பயிற்சிக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

உங்கள் பதிவுகட்கு

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

05108



## கோழி அடைகாத்த பாம்பின் முட்டை



5 வருடமானசிக நோயினால் சுகம்பெற்ற சகோதரி



08.03.90 திகதி கூட்டத்தில் 5 வருடம் இடது கை தூக்க முடியாத இச்சகோதரி விடுதலை கண்டு சுகமாகினார்
10 வருட அஸ்மா நோயினால் சுகம்பெற்ற சகோதரி.



18.03.90 சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற சுவிஷேச கூட்டத்தின் போது ஊன்றுகோலுடன் வந்த ஒரு சகோதரன் ஊன்றுகோலை விட்டு நடந்து வந்து காட்சி கொடுத்து, ஊன்றுகோலை ஆலயத்துக்கே கொடுத்துவிட்டார்.

உலகமே

''காட்டுவீரியனின் முட்டைகளை அடைகாத்து, சிலந்தியின் நெசவுகளை நெய்கிறார்கள்; அவைகளின் முட்டைகளைச் சாப்பிடுகிறவன் சாவான்; அவைகள் நெருக்கப்பட்டதேயானால் வீரியன் புறப்படும்''
(ஏசாயா 59: 5)

மேற்கூறிய வசனத்தின்படி நவீன உலக மக்களின் வாழ்வும் பக்தியும், தன் முட்டைகளை அடைகாப்பதாக நினைத்துக்கொண்டு பாம்பின் முட்டைகளை அடைகாக்கும் கோழியைப்போல் உள்ளது. கோழி குறிப்பிட்ட சில நாட்கள் தன் குஞ்சுகளுக்காகக் காத்திருக்கும்போது, ஒரு முட்டைக்குள்ளிருந்து வீரியன் பாம்புக் குட்டி வெளியே வருமேயானால், அது எவ்வளவு பரிதாபமாக இருக்கும். அந்தப் பாம்பு, கோழியின் கண்களைக் கொத்தாதா? இப்படியே இன்று நமது பக்தியும் உள்ளது. அறியாத, புரியாத, மூடத்தனமான, நம்பிக்கையற்ற, பகுத்தறிவற்ற பக்தியே இன்று நிறைந்துள்ளது. இதன் முடிவு காட்டுவீரியன் பாம்பு வெளியே வந்தது போலவே அமையும் சாபமும், அழிவும் மனிதனை ஆட்டிப்படைக்கும்

அழகாக நெசவு செய்யப்பட்ட சிலந்தியின் வலை, பார்க்க அழகாக இருக்கும். ஆனால் ஒரு நொடியில் அறுந்து, நிலை குலைந்து போய்விடும். இப்படியே எமது தெய்வீக பக்தியும் இன்று இருக்கின்றது. ஆகவே, பிரியமானவர்களே! முத்தொழிலோனை மும்மூர்த்தியைத் தேடி நாடுங்கள். அவர் நம்மை விடுவித்துக், காத்துக்கொள்வார் ஆகவே உங்களது துயர் துடைக்க தெய்வீக ஆராதனை ''இயேசு ஜீவிக்கிறார்'' பணியினரால் நடாத்தப்படும் சாதி, இன, மத பேதமின்றி கலந்து தெய்வீக திருஅருளை பெற்றுக் கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| இடம்: | மானிப்பாய் |
| காலம்: | மே 16 — 20 வரை மாலை |
| தொடர்பு: | பாஸ்டர் இராஜசூரியர் ஆனைக்கோட்டை |
| ஜூன் | 4 — 5 வரை கிளிநொச்சி |
| | 6 — 8 வரை முல்லைத்தீவு |
| தொடர்பு: | பாஸ்டர் சந்தனப்பிள்ளை ஜெப ஆலயம், கிளிநொச்சி |
| செய்திகள்: | சகோ. எஸ். இராஜேந்திரம் |

JESUS LIVES
P. O. BOX 1044, COLOMBO. 05069

## நன்றி! தாயே நன்றி!

கடந்த இரண்டு வருடங்களாக ஈழத் தமிழர் சுக துக்கங்களில் பங்குபற்றி எம்மோடு இரண்டறக் கலந்திருந்த ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி தனது சொந்த நாடு திரும்புகின்றார்.

எமது டாக்டர்கள் பிரான்ஸிற்கு அகதிகளாக ஓடிக் கொண்டிருக்கையில் அங்கிருந்து இங்கே வந்தவர்தான் டாக்டர் செல்வி ஜாக்குலின்.

மக்களின் சேவை எனக் கூறிக்கொண்டு பணம் பறிக்கும் தனியார் டாக்டர்கள் மத்தியில்

தமது தனியார் வைத்தியசாலையில் பணம்கட்டி ரசீது பெற்றபின் நோயாளியை அரச வைத்தியசாலையில் பார்க்க நேரம் ஒதுக்கும் டாக்டர்கள் மத்தியில்......

சொந்தச் சகோதரர்கள் இறந்துபடல் கண்டும் தாய்மண்ணை வெறுத்து பணம் தேட அந்நிய நாடு செல்லும் டாக்டர்கள் மத்தியில்......

மக்களின் வரிப்பணத்தில் படித்து உயர் படிப்புப் பெறப் புலமைப் பரிசிலில் வெளிநாடு சென்று தாய்நாட்டை மறந்துபோன டாக்டர்கள் மத்தியில்......

செல்வி ஜாக்குவின் ஒரு மனிதப் புனிதையாக மந்திகையில் சேவைபுரிந்தார்.

இவர் கடந்த இரு வருடங்களாக வடக்கில் செய்த சேவையைப் போற்றாதார் இல்லை.

எப்படியான ஒரு காலகட்டத்தில் இவரது சேவையை நாம் பெற்றுள்ளோம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

## இதயநாதம்

15-05-1990 செவ்வாய்க்கிழமை

### நலவாக்கு

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழியுண்டாகும். ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.

—ஆங்கிலப் பெரியார்

**ஸ்டான்லி வீதி யாழ்ப்பாணம்**

வடக்கு—கிழக்கில் டாக்டர்களின் தேவை எந்தக்காலத்தில் அவசியமாக, அவசரமாகத் தேவைப்பட்டதோ அந்தக் காலகட்டத்திலேயே அவர் இங்கே இருந்தார்.

தினமும், சூட்டுக்காயங்களுடனும், இரத்தப் பெருக்குடனும் மக்கள் அங்கவீனர்களாகவும், சடலங்களாகவும் மாறிக் கொண்டிருந்த காலத்தில் அவரது சேவை கிடைத்தது தமிழ் மக்கள் செய்த பாக்கியமே.

இந்திய இராணுவத்திற்குச் சிம்ம சொர்ப்பனமாக திகழ்ந்தவர் ஜாக்குலின்.

வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் நடத்திய காட்டுத் தர்ப்பாரின் போது வீதி எங்கும் உடல்கள் குற்றுயிராகக் கிடந்தன.

டாக்டர்கள், மக்கள் வீடுகளை, வைத்தியசாலைகளை விட்டு வெளியேற முடியாத நிலையில் பயமுறுத்தப்பட்டனர்.

தனி ஒரு முயற்சிக்காகத் தன் உயிரைத் துச்சமென மதித்து வீதியில் குற்றுயிராகக் கிடந்து மக்களைத் தமது வாகனத்தில் ஏற்றிவந்து சிகிச்சையளித்தவர் ஜாக்குலின்.

அன்று அவரது சேவையை ஆச்சரியம் கலந்த வியப்புடன் நோக்கியவர்கள் இன்று அவரது பிரிவை எண்ணி வாடுகின்றனர்.

பிரான்ஸிலுள்ள எம்.எச்.எவ். அதிகாரமளிக்கப்பட்ட ஸ்தாபனத்தினூடாக டாக்டர் செல்வி ஜாக்குலின் இலங்கை வந்திருந்தார்.

மந்திகை, தெல்லிப்பழை வைத்தியசாலைகளில் இவரது சக டாக்டர்களுடன் இவர் செய்த சேவையால் இன்று பலர் தமது உயிரைத் தக்க வைத்துள்ளனர்.

கடந்த இரு வருடங்களில் மட்டும் இவர் நான்கு தடவை இரத்ததானம் செய்துள்ளார்.

சேவை என்பது ஒரு குறுகிய வட்டத்துள் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு மட்டுமே உரியதல்ல.

இவரது சேவை வேறு பல நாடுகளுக்கும் கிடைக்கவுள்ளது.

இவரது புனிதப்பயணத்தை வடக்கு மக்களாகிய நாம் வாழ்த்தி அனுப்புவோம்.

இவரால் உயிர் பெற்றவர்களும், உறவுகளைத் தக்கவைத்துக் கொண்டவர்களும், வடபகுதி மக்களும் இவர் நினைவை நெஞ்சத்தே நிலை நிறுத்திக் கொள்வோம்.

ஒரு ஆய்வுக் கண்ணோட்டம்

# தனியார் கல்வி நிறுவனங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

**பொ. ஐங்கரநேசன்**

(யாழ் மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியத் தலைவர்)

பாடசாலைக்குப் புறம்பான கல்விப் போதனை இன்று நேற்றுத் தொடங்கியதல்ல. பல தசாப்தங்களுக்கு முன்னதாகவே ஆங்காங்கு காணப்பட்ட இப்போதனை முறை இங்கு ஒழுங்கமைக்கப்பட்ட வடிவத்தில் தனியார் கல்வி நிறுவனங்களாக பரிணமித்துள்ளது,

தனியார் கல்வி நிறுவனங்கள் ஈழத்தில் மட்டுமல்லாமல் சிங்களப் பகுதிகளிலும் பரவலாகத் தோன்ற ஆரம்பித்துள்ளன. பாடசாலைகள், கோயில்கள், வைத்தியசாலைகள் போன்றே தனியார் கல்வி நிறுவனங்களும் சமூகத்தில் இன்று பின்னிப் பிணைந்துவிட்ட போதிலும் இதற்கெதிரான கருத்துக்களும் அவ்வப்போது வெளியிடப்பட்டே வந்துள்ளன. அண்மைக்காலங்களிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான கணிப்பீடுகள் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன.

தனியார் கல்வி நிறுவனங்கள் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம், அதன் நன்மையான பாதகமான விளைவுகள் ஆராயப்பட வேண்டியவை என்பதில் யாருக்கும் மறுப்பிருக்க முடியாது. ஆனால் தனியார் கல்வி நிறுவனங்களின் தோற்றம், அவற்றின் பரிணாம வளர்ச்சிக்கான காரணங்களைக் கண்டறியாமல் மேலெழுந்தவாரியாக மேடைப் பேச்சுக்கு இலகுவான ஒரு விடயம் போன்று தனியார் கல்வி நிறுவனங்கள் பலராலும் விமர்சனத்துக்குள்ளாக்கப்படுவது உண்மையான ஆய்வாக ஒரு போதும் இருக்கப் . போவதில்லை.

ஒவ்வொரு ஆய்வும் எடுத்துக் கொண்ட கருப்பொருளிற்கு சாதகமான, பாதகமான விளைவுகளைக் கருத்திற் கொண்டே முடிவுக்குட்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறாயின் மாத்திரமே முடிவு சரியானதாகவும் அமையும்.

### காரணங்கள்

தனியார் கல்வி நிறுவனங்களைப் பற்றிய கண்ணோட்டத்தில் அவற்றின் தோற்றம், வளர்ச்சிக்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டியவையாகும். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்விமான்கள் போன்ற பல மட்டங்களிடையே திரட்டிய தகவல்களின் படி தனியார் கல்வி நிறுவனங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பின்னணியில் காரணங்களாக அமைந்தவையில் பிரதானமானவை இலங்கையில் கல்வி அமைப்பு முறையும் பாடசாலைகளின் ஆசிரிய நியமனங்களுமேயாகும்.

இலங்கையின் கல்வி அமைப்பில் ஆண்டு 5 இற்கான அனுமதி தொடங்கி பல்கலைக்கழக அனுமதிவரை தரப்படுத்தலே நிகழ்ந்து வந்துள்ளது. பல்கலைக்கழக அனுமதியில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் எனும் நிகழ்வே எம் இளைஞர்களை சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக வெகுண்டெழச் செய்வதற்கு காரணமாக அமைந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். ஆண்டு 5 இலேயே மாணவன் புலமைப் பரிசில் பரீட்சை, பாடசாலை அனுமதிப் பரீட்சை போன்றவற்றிற்கு தோற்ற வேண்டிய நிலையில் உள்ளான். நகரின் பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறவேண்டி பரீட்சைக்குத் தோற்றும் ஆயிரக்கணக்கான மாணவர்களில் புள்ளிகளின் அடிப்படையில், மிகக் குறைந்தளவு மாணவர்களே இக்குறிப்பிட்ட பாடசாலையில் அனுமதி பெறுகிறார்கள்.

### பாடசாலை அனுமதி

ஆண்டு 5 இல் பாடசாலைகளின் அனுமதிப் பரீட்சைகளில், புலமைப் பரீட்சைகளில், சித்தியெய்தி பிரபல பாடசாலைகளில் அனுமதிபெறும் மாணவர்களின் புள்ளிவிபரம் காட்டும் உண்மை எம்மை சிந்திக்க வைக்கின்றது. இவ்வாறாக அனுமதி பெறும் மாணவர்கள் கல்வி, பொருளாதார வசதிகளில் சற்று உயர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஆய்வாளர்களின் மதிப்பீட்டின்படி இளம் சிறார்கள் யாவரினதும் அறிவு மட்டம் ஏறக்குறைய ஒரே மாதிரியாகவே இருக்கிறது. அவர்களின் சூழலே இதனை மேலும்விரிவடையச் செய்கின்றது வசதிகள், வாய்ப்புக்கள் உள்ள மாணவன் தன் முயற்சியினால் பரீட்சையில் சித்தியடையக்கூடிய வாய்ப்பு அதிகமாகவே இருந்து வந்துள்ளது.

புள்ளிகளின் அடிப்படையில் அனுமதி பெறத் தகுதியற்றவர்களென தவிர்க்கப்படும் இளம் சிறார்கள்உளவியல் ரீதியான தாக்கத்திற்கு ஆளாவதுடன் யாதாயினும் ஒரு வசதியற்ற பாடசாலையிலே தன் ஆரம்பக் கல்வியைக் கற்க தொடங்குகின்றான். இதன்மூலம்ஆண்டு 5 இலேயே மாணவன் தரப்படுத்தலுக்கு ஆளாகின்றான். நகரில் பிரபல பாடசாலைகள் அனுமதி கோரி விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக நாளடைவில் ஒரே நாளியேயே தமது அனுமதித் தேர்வுகளை நடாத்தவும் ஆரம்பித்துள்ளன.

### நிர்ப்பந்தம்

இதன் மூலம் மாணவன் யாதாயிலும் ஒரு பாடசாலையில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறான். இதன் மூலமும் மாணவன் பெரிதும் பாதிப்படைகின்றான். புள்ளியடிப்படையில் பரீட்சைக்கு தோற்றிய பாடசாலையில் அனுமதி கிடைக்காத மாணவன் மற்றைய பாடசாலையில் பரீட்கைக்குக் தோற்றாத காரணத்தால் அனுமதிக்கு மறுக்கப்படுகின்றான். ஒரே நேரத்திலேயே இவ்வாறான பரீட்சை நடைபெறுவதால் திரிசங்கு நிலைக்கு ஆளாகின்றான். புள்ளியடிப்படையில் அனுமதிக்கப்படும் அதே வேளையில் நகரின் சில பிரபல்ய பாடசாலைகளில் அப்பாடசாலைகளின் பழைய மாணவர்களின் உறவினர்கள் என்ற அடிப்படையில் குறைநத புள்ளியைப் பெற்ற மாணவர்களும் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இந்நிலையும் தரப்படுத்தலுக்கு ஒப்பான ஒரு செயன்முறையேயாகும்.

**பாடசாலைகளில் நிகழ்ந்த பல ஆசிரிய நியமனங்களும், தகுதியான ஆசிரியர்களின் இடம்பெயர்வும் தனியார்கல்வியின் வளர்ச்சிக்கே உரமேற்றின.**

முற்பட்ட காலப்பகுதியில் கல்விமான்களே ஆசிரியத் தொழிலை உயர்வாகப் பேணி, தம்மை மாணவர்களுக்கு அர்ப்பணிப்பதற்கென அத்தொழிலை மன நிறைவுடன் தேடி ஏற்றுக் கொண்டனர். ஆனால் நாளடைவில் ஆசிரிய நியமனங்கள் யாதாயினும் ஒரு தொழில் வேண்டியவர்களுக்கு வழங்கப்பட்ட நியமனங்களாகியுள்ளன. இதனால் இத்தகைய ஆசிரியர்களில் பெரும்பான்மையானவர்களில் அர்ப்பணிப்புத் தன்மை இல்லாமல் காணப்படுகின்றது. நியமனம் பெற்ற ஆசிரியர்களில் இதனால்தான் ஏனோதானோ என்ற மனப்பான்மை வெளிப்படுகின்றது.

### ஆசிரியர் லீவு

பிறமாவட்டங்களுக்கு மாற்லாகிச் செல்லும் ஆசிரியர்களில் ஒரு பிரிவினர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி வசதியான இடங்களுக்கு திரும்பியுள்ளனர். சிலர் பின்தங்கிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு இடம் மாற்றலாகியதும் அங்குள்ள அதிபர்களின் அனுசரணையுடன் மாதத்தில் சில நாட்களுக்கு மட்டுமே பாடசாலை சென்று வருகின்றனர். இதற்காக மாத வேதனத்தில் ஒரு தொகை பின்தங்கிய மாவட்டங்களில் அதிபர்களுக்கு இத்தகைய ஆசிரியர்கள் வழங்கி வருவது ஆதாரத்துடன் உள்ள நிகழ்வுகளாகும்.

இடம் மாற்றலாகும் ஆசிரியர்கள் தமக்கு வழங்கப்பட்ட சலுகைகளான விடுமுறைகளை உரிமைகள் என்ற மனோபாவத்தில் பயன்படுத்துகின்றனர். இதனால் பெருமளவு நாட்களை விடுமுறை என்ற ரீதியில் பாடசாலைக்கு செல்லாது தவிர்த்து வருகின்றனர். பெண் ஆசிரியர்களுக்கு வழமையாக கிடைக்கும் 3 மாத கால தவணை விடுமுறைகள், 41 நாட்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய விடுமுறைகளை விட பிரசவத்திற்கென மேலதிகமாக 2 மாதம் விடுமுறையும் வழங்கப்படுகின்றது. பெண்கள் ஆசிரியப் பதவிக்கு பொருத்தமற்றவர்கள் என்பதல்ல இதன் அர்த்தம் இவ்வாறான நீண்ட விடுமுறைகளால் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதனை சகலரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

இவ்வாறான விடுமுறை கோரும் போது அதற்குப் பதிலாக மாற்று ஆசிரியர் ஒருவரை நியமிப்பதற்கு பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதும் ஓர் காரணமாகும். தமிழ்ப்பகுதிகளில் ஒரு ஆசிரியரை மட்டும் கொண்டு இயங்கிவரும் பாடசாலைகள் இன்னும் உள்ளன. ஒரு பரிசோதனைக் குழாயைக் கூட இதுவரை கண்டிராத பாடசாலைகளும் இன்னமும் உள்ளன.

### ஆசிரிய நியமன ஊழல்

முன்னைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சிகளின் ஆட்சிக் காலங்களில் அக்கட்சிகளின் தரகர்களினால் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. இவை தகுதி அடிப்படையில் அல்லாமல் பணத்தின் கனத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டன என்பதை யாரும் மறுக்க முடியாது.

(தொடரும்)

# செய்தி மஞ்சரி

## 'யுனிசெப்' உதவி குறைகிறது

கடந்த ஐந்து வருடங்களாக 40 கோடி ரூபாவை உதவித் தொகையாக யாழ். மாநகர சபைக்கு வழங்கி வந்த 'யுனிசெப்' இம்முறை 20 கோடி ரூபாவாக தனது உதவித் தொகையை குறைத்துள்ளது,

இந்த 20 கோடி ரூபாவில் தாய்மார்கள் குழந்தைகள் போன்றோரின் முன்னேற்றத்திற்கும் செலவிடப்படும்.

கடந்த ஐந்து வருடங்களாக 'யுனிசெப்' நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

## விலைப்பட்டியல் அவசியம்

கிளிநொச்சி நகரில் உள்ள சகல வர்த்தக நிலையங்களிலும் விலைப்பட்டியல் வைக்கப்படவேண்டும் எனவும் தேநீர்ச் சாலைகளில் சுகாதாரம் பேணப்படவேண்டும் எனவும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் கோரிக்கை ஒன்றினை விடுத்துள்ளனர்.

## சொந்த இடங்களுக்கு வரலாம்

வெளிமாவட்டங்களில் ஐந்து ஆண்டுகள் கடமையாற்றிய 200 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

வெளிமாவட்டங்களில் 5 வருடம் சேவையாற்றிய ஆசிரியர்களில் இடமாற்றம் கோரி விண்ணப்பபித்தவர்களின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டன. இவர்களது இடமாற்றங்கள் பற்றிக் கல்விப் பணிப்பாளர்கள் மட்டத்திலும் ஆராயப்பட்டு அதன் பின்னர் பெயர் விவரங்கள் அறிவிக்கப்படும்.

## ஆசிரியர் வேலைத்திட்ட அறிக்கை

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை ஆசிரியர்களும் ஒவ்வொரு மாதமும் வேலைத் திட்ட அறிக்கை ஒன்றை தயார் செய்ய வேண்டும் எனப் பணிக்கப் பட்டுள்ளது.

உரிய கடமைகளைச் செய்யாது விடும் ஆசிரியர்களையும், உண்மையுடன் கடமையாற்றியும் அவர்களுக்குரிய பதவியுயர்வு, மற்றும் சலுகைகள் கிடைக்கப் பெறாது இருக்கும் ஆசிரியர்களையும் இனம் காணும் பொருட்டே இந்த மாதாந்த அறிக்கைத் திட்டம் அமுல் செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் யூன் முதலாம் திகதி தொடக்கம் நடை முறைக்கு வரவுளளது.

## பெறுபேறுகள் யூலையில்

கடந்த மார்ச் மாதம் நடந்த க. பொ. த சாதாரணப் பரீட்சையின் பெறுபேறுகள் யாவும் யூலை மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப் பட்டுள்ளது.

பெறுபேறுகளைத் தொகுக்கும் வேலை தற்போது ஆரம்பமாகியுள்ளதெனவும், 98 சதவீதமான பரீட்சைத் தாள்கள் திருத்தப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப் பரீட்சைக்கு மொத்தம் 5 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

## நாகேஸ்வரனுக்கு முதற்பரிசு

கொழும்பு தமிழ்ச் சங்கம் ஆண்டு தோறும் நடத்தி வரும் ''பரிசில்களும், தேர்வுகளும்'' போட்டியில் மகாகவி பாரதியின் இலக்கிய ஆய்வுக் கட்டுரையை எழுதிய திரு. கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு முதற் பரிசு கிடைத்துள்ளது

1989 ஆம் ஆண்டிற்கான இப்போட்டியின் முடிவுகளைக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் க.இ.க. கந்தசுவாமி அறிவித்துள்ளார்.

## ஆக. 10 இல் பரீட்சை ஆரம்பம்

க. பொ. த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இப்பரீட்சை தொடர்ந்து 20 தினங்களுக்கு நடைபெறும்.

தனியாரிடம் இருந்தும் பாடசாலைகளிலிருந்தும் சொற்ப விண்ணப்பங்களே பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைத்துள்ளன. பெரும்பாலான பாடசாலைகள் விண்ணப்பப் பத்திரங்களை இன்னமும் அனுப்பவில்லை. என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மேன்முறையீட்டு மன்றில் வழக்கு

புதிதாக வழங்கப்படும் மோட்டார் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் சட்ட பூர்வமற்றது என மேன்முறையீட்டு மன்றத்தில் வழக்கொன்று தாக்குதல் செய்யப்பட்டுள்ளது.

புதிய அனுமதிப் பத்திரங்கள் தேவையற்றவை, சட்ட விரோதமானவை மக்களைத் தொந்தரவுக்குள்ளாக்குகின்றன என மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## உணவு கையிருப்பில் உண்டு

அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு நாட்டில் என்றும் தட்டுப்பாடு ஏற்பட மாட்டாதென வர்த்தக அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்துளளார்.

அத்தியாவசியப் பொருட்களுக்கு நாட்டில் என்றும் நெருக்கடி இல்லாமல் பார்த்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டதன் பிரகாரம் எத்தகைய நெருக்கடி நிலையிலும் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் கையிருப்பில் இருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# இலங்கை நிர்வாக சேவை; வயதெல்லையில் தளர்வு!


இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதில் இருந்து வந்த வயதெல்லைக் கட்டுப்பாடு ஐந்து வருட காலத்திற்குத் தளர்த்தப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவோர் 26 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

எனினும் கடந்த காலங்களில் பல்கலைக்கழகங்கள் ஒழுங்காக இயங்காததால் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியாது போயிற்று.

பல்கலைக்கழக மாணவர்கள் நிர்வாக சேவையில் சேர்ந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கும் வகையிலேயே இந்த வயதெல்லைக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது.

இந்த வயதெல்லை கட்டுப்பாட்டு தளர்வு இவ்வருடம் முதல் 1994 ஆம்வருடம்வரை அமுலில் இருக்கும் என பொதுநிர்வாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



● இப்போதெல்லாம் என் மனைவி என்னைத் திட்டிறதே இல்லை

● மிகவும் மகிழ்ச்சியாயிருக்கே!

● அட நீங்க ஒண்ணு ... சட்டம்பியார், இப்ப எல்லாம் என்னை அவள் அடிக்கவே ஆரம்பிச்சுட்டாள்.

## தினசரி நடவடிக்கை

யாழ் உள்நாட்டு வர்த்தகத் திணைக்கள நிறுவைகள் அளவைகள் பிரிவு யாழ் செயலகத்தில் தினமும் வியாபாரிகளின் தராசு படிகளுக்கு முத்திரையிடும் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

சகல வியாபாரிகளும் தமது தராசுப் படிகள் அனைத்தையும் கொண்டு வந்து முத்திரையிட வேண்டுமென்றும் தவறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அளவைகள், நிறுவைகள் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு.கா.நாகலிங்கம் எச்சரித்துள்ளார்.

திருநெல்வேலிச் சந்தை வியாபாரிகள் அனைவரும் தமது தராசு படிகளுக்கும் லீற்றர், மீற்றர் அளவைகள், மேடைத்தராசு, தூக்குத்தராசுகள் போன்றவற்றிற்கு முத்திரையிட்டுக் கொள்ளத் தவறக்கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.(36)

## சபாரத்தின சுவாமி நினைவு விழா

திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் நினைவுவிழா செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமத்தில் 20ம் திகதி காலை 9 மணிக்கு இளைப்பாறிய அரசஅதிபர் செ.சிவஞானம் தலைமையில் நடைபெறும்.

திவ்வியஜீவன சங்கத் தலைவர்சி.கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் 'திருவாசகத்தைப் பேணியதிருவாசக சுவாமிகள்' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

### கனகன்புளியடி பஸ்சேவை

## யாழ் சாலை முகாமையாளர் முரசொலிக்கு நன்றிக் கடிதம்

794 ம் இலக்க யாழ்-கொடிகாமம் (கனகன்புளியடி) பஸ் சேவை கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் மீண்டும் முன்னரைப்போல் கச்சேரி-அரியாலை-செம்மணி(கண்டிவீதி) வழியாகசேவையாற்ற யாழ்ப்பாண சாலை அனுமதியளித்துள்ளது.

இச்சேவை கடந்த சில தினங்களாக செம்மணி முத்திரைச்சந்தி வழியாக பாதை மாற்றம் செய்யப்பட்டதனால் பிரயாணிகள் எதிர்நோக்கிய சிரமங்களை முரசொலி சுட்டிக்காட்டியதை அடுத்து யாழ் சாலை முகாமையாளர் திரு.சு.மணிவாசகன் கடந்த வெள்ளிக்கிழமை நேரில் சென்று நிலைமையை அவதானித்திருந்தமை வாசகர் அறிந்ததே.

இதே வேளை இவ்விடயம் சம்பந்தமான செய்திகளை வெளியிட்டமைக்கு திரு மணிவாசகன் முரசொலிக்கு கடிதம் மூலம் நன்றி தெரிவித்துள்ளார்.

'மக்களின் சேவைக்கு எமது ஸ்தாபனம் எப்பொழுதுமே முக்கியத்துவம் வழங்கு மென்பதை அறியத்தருகின்றேன்' என அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### சாரண ஆணையாளர் வரதலிங்கம்

## "தீவுப்பகுதியின் நலனில் அதிக அக்கறை கொண்டவர்"

(சித்தன்கேணி)

''விபத்தில் அகப்பட்டுத் தனது உயிரை மாய்த்துக் கொண்ட யாழ். மாவட்டச் சாரண ஆணையாளர் செ. வரதலிங்கத்தின் இழப்பு எமக்கெல்லாம் ஒரு பேரிழப்பாகவே அமைந்துள்ளது. பிரபல சமூகத் தொண்டரான இவர் தீவுப்பகுதியிலுள்ள சகல அமைப்புகளிலும் அங்கம் வகித்து அவையெல்லாம் சிறப்பாக இயங்கத் தன்னாலான சேவையைச் செய்த பெருமகன். வேலணை சைவப் பிரகாச மகாவித்தியாலயத்தின் அதிபராக இருந்து இளைப்பாறிய இவர், தீவுப் பகுதிச் செஞ்சிலுவைச் சங்கப் பொறுப்பாளராக இருந்து ஆற்றிய சேவைகளை நாம் என்றுமே மறக்க முடியாது.''

யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனச் செயற்குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் கொட்டடியிலுள்ள சம்மேளனக் காரியாலயத்தில் தற்காலிக தலைவர் வை. செகராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது இரங்கலுரை நிகழ்த்திய வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூகநிலையங்களின் சமாஜச் செயலாளர் செ சண்முகவடிவேல் ஆசிரியர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் செ. வரதலிங்கத்தின் திடீர் மரணம் குறித்து இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் அங்கு செலுத்தப்பட்டது.

நிர்வாக ரீதியாக சமாஜம், சம்மேளனத்திற்கு வழங்கப்படும் மதிப்புப் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. மேலதிகாரிகள் இவற்றுக்கு மதிப்புக் கொடுக்காது நேரடியாகச் சனசமூக நிலையங்களுடன் தொடர்பு கொள்வதனாலேயே இவற்றின் செயற்பாடுகள் பின்னடைகின்றன என்று பலர் கருத்துத் தெரிவித்தனர்.

இம் மாதம் 27—ம் திகதி சம்மேளனத்தின் இறுதி நிர்வாகசபைக் கூட்டமும் ஜூன் மாதம் 3—ம் திகதி வருடாந்தப் பொதுக் கூட்டமும் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. (12)

## ''சான்றோரை வணங்கினால் பண்பட்ட வாழ்வு கிட்டும்''

(இளவாலை)

சான்றோரைப் போற்றி வணங்கி அவர்களின் சொற்கேட்டு வாழும் சமூகமே அமைதியான பண்பட்ட வாழ்க்கையை வாழ முடியும். எமது தமிழ்ச் சமுதாயத்தில் கடந்த நூறாண்டுகளுக்கு மேலாக இந்தப் பண்பை மறந்த காரணத்தினாலேயே நம் தமிழும், சைவமும் இன்று நலிவுற்று நிற்கும் நிலை ஏற்பட்டது. இன்று இலக்கண வித்தகரின் பண்பு மாராட்டலின் நிமித்தம் இங்கு நிகழ்கின்ற சைவச் சான்றோர் சங்கமத்தை நோக்கும் போது நமக்கோர் பண்பட்ட ஒளிமயமான எதிர்காலம் கண்முன் தெரிகின்றது.

இவ்வாறு சைவப் பெரியார் மு. ஞானப்பிரகாசம் மயிலங்கூடலில் நடைபெற்ற ''சைவச்சான்றோர் சங்கமத்தின்'' போது குறிப்பிட்டார்

நல்லை ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் அருளுரையுடன் வைபவம் ஆரம்பமானது.

நல்லை ஆதீன பரமாச்சாரிய சுவாமிகள் இலக்கண வித்தகருக்கு பொன்னாடை போர்த்தி உருத்திராக்க மாலை அணிவித்து ஆசி வழங்கினார்.

சைவச் சான்றோர்களான இந்துசாதனம் ஆசிரியர் நம. சிவப்பிரகாசம், பண்டிதர் மு. கந்தையா, பண்டிதர் க. வீரகத்தி, பண்டிதர் க. சச்சிதானந்தன் உள்ளிட்ட பல சான்றோர் உரையாற்றினர். பண்டிதர் கி. அப்புத்துரை வரவேற்புரை வழங்கினார்.

மயிலங்கூடல் ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையினர் இவ் விழாவை ஏற்பாடு செய்திருந்தனர் (25)

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# பலதபால்நிலையங்கள் புனரமைப்பு புதிதாகத் திறக்கவும் நடவடிக்கை

(மாங்குளம்)

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் கொக்குளாய், கொக்குத்தாடுவாய்உபதபால் நிலையங்களை புனரமைக்க ஒரு இலட்சத்து எண்பத்தையாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் கொக்கிளாய் கொக்குத் தொடுவாய் உபதபால் நிலையத்தை முல்லைத்தீவு தபால் அத்தியட்சகர் ரி. குணரட்ணம் தலைமையில் திறந்து வைத்துப் பேசும் போது தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில், 1989 -ம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின்படி முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு தபாலகங்கள் புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நடப்பு வருட நிதி ஒதுக்கீட்டின்படி செம்மலை, முள்ளியவளை, பாண்டியன்குளம் உட்பட மேலும் பதினொரு தபால் நிலையங்களை அமைக்க இருப்பதாகவும் குறிப்பிட்டார். (38)

## எதிரி ஒழித்து நின்று அடித்தார் மன்னார் வாசி யாழ் ஆஸ்பத்திரியில்

கடந்த வாரத்தில் ஜனாப்முகமது காசீம்ஐயுபுகான் (27) என்பவர் தலையில் காயத்துடன் கவலைக்கிடமான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது இவர் மன்னார் சிலாவத்துறை வீதியைச்சேர்ந்தவர் என்றும்,இவருக்கும் இவரது உறவினருக்கும் இடையில் ஏற்கனவே ஏற்பட்ட தகராறு காரணமாக இவரை அந்த நபர் ஒழித்து நின்று அவரது மண்டையில் அடித்து தாக்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. (4)

## துணுக்காய் பகுதிகளில் மாவிற்கு பெரும் தட்டுப்பாடு

துணுக்காய் பகுதியில் மா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது அங்குள்ள பல,நோ.கூ. சங்க சமாசத்திலும், சங்கத்தின் கிளைகளிலும் மாவுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது,

இதனால் தனியார்வியாபாரிகள்மாவைக் கூடிய விலைக்கு விற்றுவருகின்றார்கள் பாணினது விலையும் அதிகரித்துள்ளது.(ப. 8)

## நியமனம், பதவியுயர்வு அநீதியை விசாரிக்க உயர்மட்டக் குழு

நியமனம், பதவியுயர்வில் அநீதி விளைவிக்கப்பட்டால் விசாரித்து நீதிவழங்க உயர்மட்டக்குழு நியமிக்கப்படும்.

இனவிகிதாசாரம்,தகைமை ஆகியவற்றின் அடிப்படையில் மாத்திரம் அரசாங்க நியமனங்களையும், பதவியுயர்வுகளையும் வழங்கும் புதிய நடைமுறை அமுலுக்கு வந்தபின் எவருக்கும் அநீதி இழைக்கப்பட்டால் உயர்மட்டக்குழு ஒன்று அதனை விசாரணை செய்து நீதி வழங்கப்படும்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சு இந்த உயர்மட்டக்குழுவை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

## புங்குடுதீவு தேவாலய உற்சவம்

புங்குடுதீவு புனித பிரான்சீஸ் சவேரியார் தேவாலய வருடாந்த உற்சவம் 11ம் திகதி கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து தினங்கள் மாலை செபமாலை ஆராதனைகளும், திருப்பலிப் பூசைகளும் ஒப்புக் கொடுக்கப்படும்.

இந்த உற்சவத்தின் போது விசேடவிதமாக மறை உரைகளும், நிகழ்த்தப்படவுள்ளன.

பத்தொன்பதாம் திகதி மாலை நற்கருணை நாதரின் எழுந்தேற்ற நிகழ்ச்சியும்' மறுநாள் காலை 20ம் திகதி திருநாட்திருப்பலிப் பூசையும் புனிதரின் திருச்சொரூப திருக்கூட்டுப் பவனியும் இடம்பெறவுள்ளன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் புங்குடுதீவு பங்குத்தந்தை அருள் திரு. நீக்லஸ் —குறூஸ் அடிகளாரும் ஆலய பரிபாலன சபையினரும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இசைமணி திருஞானசம்பந்தனுக்கு

## திருமுறைப்பணி மூலமாக பெரும் புகழ் சேர்கின்றது

''எமது நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்துடன் நீண்டகாலத் தொடர்பும் ஆதீனத்தின் ஓதுவார் மூர்த்திகளுள் ஒருவருமான தேவார இசைமணி தாவடியூர் திரு இரா. திருஞானசம்பந்தன் இலங்கையில் மட்டுமல்லாது மலேசியா சிங்கப்பூர், தமிழகம் ஆகிய நாடுகளிலெல்லாம்திருமுறைப் பணிபுரிந்துபாராட்டுக்கள் பல பெற்றவர்.கடந்த சில ஆண்டுகளாகத் தமிழகத்தில் இருந்து திருமுறைப்பணி புரிந்து விட்டு தற்போது மீண்டும் இங்கு திருமுறைப் பணி புரிந்து வருகின்றார் அவர் பணி வளர்க என எல்லாம் வல்ல குருவருளைச் சிந்தித்து அருளாசி பகர்கின்றோம்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற திருநெறிய தெய்வீக மகாநாட்டின்போது நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசார்யசுவாமிகள் திருப்பனந்தாள் ஆதீனத்தேவார இசைமணி தாவடியூர் திரு இரா. திருஞானசம்பந்தனின் திருமுறைப் பண்ணிசைக்கச்சேரியை அருளாசி வழங்கி ஆரம்பித்து வைத்த போது மேற் கண்டவாறு கூறினார்.

இப்பண்ணிசைக் கச்சேரிக்கு வித்துவான் பிரம்மஸ்ரீ எஸ். வெங்கடேஸ்வரசர்மா வயலினும் பிரம்மஸ்ரீ எஸ் பாலச்சந்திரன் மிருதங்கமும் திரு. எஸ்.இராஜாமுகர்சிங்கும்திரு. முருகையா கடமும்,சங்கீத பூஷணம் கே'ஆர் நடராஜா கெஞ்சிராவும் பக்கவாத்தியம் வாசித்தனர். (12)

## வலி கிழக்கில் கருத்தரங்கு

கோப்பாய் நீர்வேலிப் பிரதேசத்திலுள்ள உணவு தயாரிப்பாளர்களுக்கும் உணவு பரிமாறுபவர்களுக்குமான கருத்தரங்கு சமீபத்தில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதார வைத்திய அதிகாரி திரு. எஸ் விஜரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் பிராந்திய சுகாதாரக் கல்விப் போதனாசிரியர் பிராந்திய உணர்வுப்பரிசோதகர் கோப்பாய் மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் கோப்பாய் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினர்.(33)

## எம் இனம் வாழவேண்டுமெனில் தமிழை வளர்க்க வேண்டும்

''முடியுடை வேந்தர்களாலும் குறுநிலமன்னர்களாலும் வள்ளல்களாலும் போற்றப் பெற்று சிறந்தோங்கிய நமது செந்தமிழ் அன்னியர் ஆட்சிக்காலத்தில் ஆர்வத்துடன் கற்பாரும் கற்பிப்பாறும் இன்றி வாடிவதங்கி நின்றது.ஆனால் இன்று தாய் மொழியாகிய தமிழ் மொழிக்கு முதலிடம் கொடுத்து பொதுப் பரீட்சைகளில் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. தாய் மொழியை புறக்கணிப்பவன் தனது இனத்து ரோகியாக கருதப்படுவான். நமது இனம் வாழ வேண்டுமெனில்; வளர வேண்டுமெனில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழைப் போற்றி வளர்க்க வேண்டும் தமிழ் மொழிப் பயிற்சியில் மேலும் ஊக்கம் செலுத்த முன்வரல் வேண்டும்.

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் நடைபெற்ற தமிழ் மொழித்தின விழாவில் சிறப்புரையாற்றிய ஆசிரியை செல்வி க. தம்பிப்பிள்ளை அவர்கள் இவ்வாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஆசிரியை திருமதி. பி. பத்மநாதன் அவர்களது விளக்கவுரையும் நடைபெற்றது. மாணவ தலைவன் நன்றி கூறினார். மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் தமிழ்ப் பண் பாட்டிற்கமைய சுதேசிய உடையில் சமூகமளித்திருந்தார்கள்.

## 60 வயதுடன் ஓய்வெடுங்கள்

எக்காரணம் கொண்டும் அரச ஊழியர்கள் அறுபது வயதுக்குமேல் சேவை நீடிப்புப்பெற அனுமதிக்கக் கூடாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

இளைஞர்களுக்கு இனிமேல் முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் இதற்கு சகல மாகாணசபைகளும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# வன்னிச் செய்திகள்

## வண்ணன் சிலை திறப்பு

இந்திய இராணுவத்துடன் மாங்குளத்தில் இறுதி மூச்சு வரை போராடி மரணித்த கப்டன் வண்ணனின் சிலை அவரது பெற்றோர்களினால் திறந்து வைக்கப்பட்டது. அதனையடுத்து புலிகளின் பிரமுகர்களின் உரையும் அங்கு இடம் பெற்றது. (38)

## மன்னாரில் காணிக் கச்சேரி

மன்னார் கச்சேரிக் காணிக் கிளையில் காணிக் கச்சேரி நடைபெற்று வருகின்றது.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் கட்டை பெரிய கமத்துக் காணியில் 20 பேர்ச் காணித்துண்டு வழங்குவதற்காக விசாரணைகள் நடைபெறுகின்றன.

குறைந்த விலையில் இக்காணிகள் வழங்கப்படும். மாவட்டக் காணி அதிகாரி இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (17)

## வற்றாப்பளை உற்சவம்

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் அடுத்த மாதம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகும்.

பாக்குத்தண்டல் வைபவம் இம்மாதம் 28 ஆம் திகதிதிங்கட்கிழமையும் தீப தீர்த்தம் எடுக்கும் வைபவம் அடுத்தமாதம் நாலாம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறும். என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (11)

## அன்னை ஈஸ்வரம்பா தினம்

வவுனியா சத்தியசாயி சேவா சமித்தியில் அன்னை ஈஸ்வரம்பா தினமும், சிறுவர் தினமும் அனுஷ்டிக்கப்பட்டது.

மிகவும் விமரிசையாக விழாக்கள் கொண்டாப்பட்டன.

சமித்தி தலைவர் தா. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற விழாவில் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும், பஜனையும், சொற்பொழிவுகளும் இடம்பெற்றன்.

## மன்னாருக்கு தொலைத்தொடர்பு

டென்மார்க் அரச உதவியுடன் மன்னார் மாவட்டத்திற்கு நவீன தொலைத்தொடர்பு வசதிகள் கிடைக்கவிருக்கின்றன.

இது தொடர்பாக டென்மார்க் தொலைத் தொடர்பு நிபுணர்கள் குழு ஒன்று அண்மையில் மன்னாருக்கு விஜயம் செய்தது.

இத்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல உபதபால் நிலையங்களுக்கும் வானொலி தொடர்புகளும் வழங்கப்படும்.

## முல்லையில் சூடடிக்கும் தளம்

முல்லைத்தீவு மாவட்டக் கமத்தொழில் சேவைகள் திணைக்களத்தினால் சூடடிக்கும் தளம் ஒன்று புதுக்குடியிருப்பு, ஒலுமடு, துணுக்காய் முத்தையன்கட்டு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இவை விவசாயிகளிற்கு பெரிதும் பயன்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்காளர் இடாப்பு திருத்தம்

எதிர்வரும் ஆனி மாதத்தில் மன்னார் மாவட்டத்தில் வாக்காளர் இடாப்புக்களை திருத்தியமைக்கும் வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இது தொடர்பாக மாவட்டத்தில் உள்ள 158 கிராம சேவையாளர்ளுக்கும் உதவி அரச அதிபர் அலுவலங்கள் ஊடாக பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சிந்தாமணி விநாயகர் தேர்

வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா வைபவத்தில் கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் கலந்து கொண்டார்.

பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்ட இத்தேர்த் திருவிழா வைபவத்தில் நேர்த்திகடனை நிறைவேற்ற இளைஞர்கள் அனேகர் அங்கப் பிரதிஷ்டை செய்து கொண்டார்கள். (11

## முல்லையில் இரு நேரம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 7ந் திகதி முதல் பாடசாலைகள் இரு நேரப்பாடசாலைகளாக இயங்க ஆரம்பித்துள்ளன.

ஆனால் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் உட்படச் சில பாடசாலைகளில் தவணை ஆரம்பத்திலிருந்தே மதிய உணவு வழங்கப்படவில்லை எனவும் அறிவிக்கப்படுகின்றது.

சாதாரண மக்களும்

# வங்கிகள் மூலம் கடன்பெற அரசின் புதிய நடவடிக்கை

'வசதி குறைந்தவர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படும்' என்று வெளிவிவகார அமைச்சரும், நிதியமைச்சருமான திரு. ஹரோல்ட் ஹேரத் கூறினார்.

நாராவிலயில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் சொன்னதாவது,

ஜனாதிபதியின்பணிப்புரைக்கிணங்க வங்கிகளின் சட்ட திட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன.

சாதாரண மக்களும் வங்கிகளிலிருந்து கடன் பெற்று தங்கள் தொழிலை விருத்தி செய்து கொள்ள முடியும்.

முன்னர் மக்கள் அரசாங்க உத்தியோகங்களையே எதிர்பார்த்தார்கள்.

இன்று சுயதொழில் கூடிய வருவாய் கொடுப்பதை மக்கள் உணரத்தொடங்கி விட்டனர்.' என்றார்.

கடந்த வருடம்

## துறைமுக அதிகார சபை ஏற்படுத்தியுள்ள சாதனை

1989 ஆம் ஆண்டு 268 கோடியே முப்பது இலட்சம் ரூபாவைச் சம்பாதித்து சாதனை ஒன்றினை இலங்கைத் துறைமுக அதிகார சபை நிகழ்த்தியுள்ளது.

1989 ஆம் ஆண்டு நாட்டில் குழப்பநிலை இருந்தபோதிலும் இலங்கை துறைமுக அதிகார சபை நன்கு செயலாற்றி உள்ளது

1989 ஆம் ஆண்டு துறைமுக அதிகார சபை ஊழியர் ஒருவர்சராசரி 4265 ரூபாவை சம்பளமாகப் பெற்றுள்ளார் 1988 இல் இது 3858 ரூபாவாக இருந்தது. என்பது குறிப்பிடத்தக்கது.

1948 ஆம் ஆண்டை விட 34 கோடியே 10 இலட்சம் ரூபாவை அதிகமாக இலங்கை. துறைமுக அதிகார சபை பெற்றுள்ளது இது.14.5 சதவீத அதிகரிப்பாகும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாழைச்சேனையில் இளைஞர் பலி

உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டு வந்த மரம் இறக்கும்போது சறுக்கிவிழுந்தமையால் இளைஞர் ஒருவர் பலியான சம்பவம் ஒன்று அண்மையில் வழைச்சேனைப் பகுதியில் இடம் பெற்றது.

## நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தின் வேலை நேரம் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து. வேலை நாட்களில் தொலைபேசிச் சேவைகள், மற்றும் முத்திரை விற்கும் கருமபீடங்கள்இரவு எட்டு மணிவரை நடைபெற்று வருவதாக யாழ் தபால் திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.(33)

## தீவுப்பகுதியில் முதலுதவிவகுப்பு

(காவலூர்)

தீவுப்பகுதி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவி வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன,

வேலணை, புங்குடுதீவு, நயினாதீவுப் பகுதிகளுக்கான. வகுப்புக்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவ் வகுப்புக்களில் பங்குபற்றுவோருக்கு விஷேட தாதிப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (24)

## ஆலோசனைக் கூட்டம்

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்வதத்தை மேற்கொள்ளும் திருவிழா உபயகாரர்களுக்கிடையிலான ஆலோசனைக் கூட்டம் எதிர் வரும் 22—ம் திகதி நயினாதீவு கல்யாண மண்டபத்தில் ஆலய அறங்காவலர் சபைத்தலைவர் திரு. சி. த. மதியாபரணம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. (19)

## நீர்ப்பாசனத் திட்டம்

(மூளாய்)

புத்தளம் மாவட்டத்தில் நீலபெம்ம அணைக்கட்டு, ரதவிபெந் அதிணை ஆகிய இரு பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளள. இத்திட்டங்களின் மதிப்பீட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நிர்மாண வேலைகளை மிக விரைவில் பூர்த்தியாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நீர்ப்பர்சனத் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் தயாரத்தினாவின் நேரடிப் பணிப்பின் கீழ் இயங்கவுள்ள இவ் வேலைகள விமலச்சந்திரன், சண்முகசிவானந்தன், சிசிரகுமார, சிவபாலன் ஆகிய பொறியியலாளர் கொண்ட குழுவினர் பொறுப்பாகவுள்ளனர்.

இந்நீர்ப்பாசனத் திட்டங்கள் பூர்த்தியானதும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்காணிகள் பயன்பெறவுள்ளன.

(ப.1)

## அதிபர் இளைப்பாறினார்

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் பல வருடங்களாக அதிபராக கடமையாற்றிய திரு.பொ. நடராசா இளைப்பாறியதைத் தொடர்ந்து ஏற்கனவே இப் பாடசாலையில் உப அதிபராக இருந்த திரு. சுப்பிரமணியம் திசநாயகம் பிள்ளை பதில் அதிபராக பதவி ஏற்றுள்ளார். (19)

## இரகசிய வாக்களிப்பு மூலமே தெரிவு

எதிர்காலத்தில் சகல ஐ.தே க வேட்பாளர்களும் கட்சி மட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலமே தெரிவுசெய்யப்படுவர். இதன் பின்னரே அவர்கள் பொதுத்தேர்தலில் போட்டியிட முடியும் என ஜனாதிபதி பிரேமதாஸ ஐ. தே. க செயற்குழு கூட்டத்தில் அறிவித்தார்.

# சுவையான செய்திகள்

## காலுறை பிறந்த விதம்

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கிரேக்க மக்கள் ,கால்களைக் குளிரிலிருந்து பாதுகாக்கவும், வெதுவெதுப்பாக இருக்கவும் ஒரு வகையான துணிகளை முழங்கால் வரையிற் கட்டிக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்று தெரிகின்றது. இதுவே காலுறைகளைப்பற்றி நமக்குக் கிடைக்கும் முதற் தகவலாகும்.

## குடித்து கும்மாளமடித்தால்...

இம்பால் நகரைச் சுற்றி அமேசன் இனத்தைச் சேர்ந்த பெண்கள் கைகளில் தீவட்டியுடன் ரோந்து வருகின்றார்கள்.

எதற்குத் தெரியுமா? குடித்துவிட்டுக் கண்டபடி நடந்து கொள்ளும் ஆண்வர்க்கத்தினரைப் பிடித்துக் கொண்டுபோய் அடைத்துவைத்து அவர்களுக்குச் சில தண்டனைகளை வழங்குவதற்காகத்தான்.

இந்தப் பெண்கள் குடித்துவிட்டுக் கலாட்டா செய்த பொலிசாரைப் பிடித்துச் சென்று அடைத்துவிட்டார்கள். கடைசியிற் பெரிய அதிகாரிகள் வந்து இவர்களை விடுவித்தார்களாம்.

## எட்டே வயதுகுட்டிப் 'புரோகிதர்'

தென் ஆபிரிக்காவில் டேர்பன் நகரில் 600 விருந்தினர்கள் வந்திருந்த ஒரு திருமணச் சடங்கை எட்டே வயது நிரம்பிய ஒரு புரோகிதக் குழந்தை நடத்தியிருக்கின்றது.

இந்து விவாக மந்திரம், மற்றும் சடங்குகள், நன்கு தெரிந்த இந்தக் குட்டிப் புரோகிதர் ஒரு முதல் வகுப்புப் பள்ளி மாணவன். சமஸ்கிருதத்திற் திருமண மந்திரத்தைச் சொன்ன இந்தக் குட்டிப் புரோகிதர் இந்து திருமண பந்தத்தைப் பற்றித் தமிழில் ஒரு சொற்பொழிவையே நிகழ்த்தி உள்ளார். உலகிலே திருமணத்தை ஒரு குழந்தை நடத்தி வைத்தது இது தான் முதற் தடவை.

## இராட்சதத் தக்காளிச்செடி

ஆல்டோ பல்லாடினி என்பவர் கலிபோர்னியாவில் லாஸ் ஏஞ்ஜல்சில் உள்ள தனது வீட்டில் ஓர் இராட்சதத் தக்காளிச்செடியை வளர்த்து இருக்கிறார், இது 18 அடி உயரம் வளர்ந்து இருக்கிறது. இதிற் காய்க்கும் பழங்கள் ஒவ்வொன்றும் பெரியனவாக உள்ளன. இந்தச் செடியிற் பழங்களைப் பறிக்க உயரமான ஏணியை இவர் பயன்படுத்துகிறார்.

# முரசொலிக்கு வந்த கடிதம்

## டிப்போவின் இரு பிரிவுகளும் ஒரே இடத்தில் இயங்குமா?

ஆசிரியர்
முரசொலி

கடந்த கால அசாதாரண நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் முல்லைத்தீவு இராணுவ முகாமுக்கு முன்பாக இயங்கி வந்த போக்குவரத்துச் சபையின் கட்டடத்திற்குள் புகுந்தது இதனால் போக்குவரத்துச் சபையின் செயலாற்றுப் பிரிவு முல்லைத்தீவு பட்டினத்திலுள்ள அரசாங்க ஊழியர்களின் 'கிளப்' கட்டடத்திற்குள் இயங்கியது.

இதே நேரம் பொறியியல் பகுதி ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்கு (பகல் வேளை) மாத்திரம் போக்குவரத்துச் சபையின் நிரந்தரப் பிரிவுக்குள் இயங்கியது. இதனால் பஸ் வண்டிகளை பழுதுபார்க்கும் வேலைகள் பாதிக்கப்பட்டு பெரும் சிரமங்களை எதிர்நோக்கியது.

தற்போதும் பொலிஸ் நிலையம் போக்குவரத்துச் சபையின் கட்டடத்திலுள்ளேயே இயங்கி வருகிறது.

தற்போது முல்லைத்தீவிற்கு புதிய சாலை முகாமையாளர் நியமிக்கப்பட்டு, இரவு பஸ் சேவை, மாங்குளம்—முல்லைத்தீவு புகையிரத இணைப்பு சேவைகள், (தபால் வண்டி இணைப்பு சேவையுட்பட) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மேலும் பிரயாணிகளுக்கு சிறந்த பஸ் சேவையை வழங்குவதற்கு இந்த இரண்டு பிரிவுகளும் ஒன்றாக இருக்க வேண்டியது அவசியம்.

தயவு செய்து சம்பந்தப்பட்ட அனைவரும் இதைக் கவனத்தில் கொண்டு மீண்டும் முல்லைத்தீவு போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான இடத்தில் இரண்டு பிரிவுகளையும் இயங்கவைக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

முல்லைத்தீவு — சி. கந்தசாமி

## பட்டதாரிகட்கு வேலையில்லை; ஆனால் நியமனங்களில்....

ஆசிரியர்
முரசொலி

இளம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பில்லை- ஆனால் ஓய்வூதியம் பெறும் பட்டதாரிகட்கு ஓய்வூதியத்துடன் தொழில் நுட்பக்கல்லூரி பல்கலைக்கழகங்களில் மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படுகின்றது,

வேலைதேடி அலையும் பட்டதாரிகள் எங்கே சமூகநீதி? என்று வேதனையோடு கேள்வி எழுப்புகின்றனர்.

60 வயது பூர்த்தி செய்தவர்கள் ஓய்வு எடுக்க வேண்டிய நேரத்தில் ஓய்வூதியத்துடன் தொழில்நுட்பக் கல்லூரிகள் பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் கற்பிக்க வேலைக்கமர்த்தப்பட்டு, இரட்டிப்பு வருமானம் பெறுகிறார்கள்.

ஆங்கிலம் கற்பிக்கும் தகைமை உடைய இளம் பட்டதாரிகள் இருக்க ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் கல்லூரிகளில் ஆங்கிலம் கற்பிப்போருக்கும் ஏன் நியமனம் வழங்கப்படவேண்டும்?

வேலை வாய்ப்புக்களில் முதலில் வேலையற்றிருக்கும் இளம் பட்டதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அதன் பின்னரேயே ஓய்வு பெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள்சேவைக்கு சேர்த்துக்கொள்ள வேண்டும் இதற்கேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

கொக்குவில் — ஆர். சுந்தரலிங்கம்

## பாணந்துறை நிலையத்தில் கூடுதல் தமிழ்ப் பொலிஸார்

பாணந்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு மலையகத்தைச் சேர்ந்த 12 தமிழ்ப் பொலிஸார் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அண்மையில் கண்டி பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியவர்கள்.

இவர்களில் 11 பேர் கான்ஸ்டபிள்கள், ஒருவர் சப்—இன்ஸ்பெக்டர்.

சப்—இன்ஸ்பெக்டர் திரு. வி. அமுதன் ஆவார்.

பாணந்துறைப் பொலிஸ் நிலையத்திற்குத் தமிழ்பேசும் பொலிஸார் கூடுதலாக வந்திருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத் தக்கது.

## மீண்டும் தலைவரானார்

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக மூன்றாவது முறையாகவும் தி.கமலநாதன் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் என். நித்தியராச் சின் தலைமையில் நடைபெற்ற இத் தெரிவில் பேரின்பநாயகம் உப தலைவராகவும்' இயக்குனர் மன்ற உறுப்பினர்களாக க. சுந்தரலிங்கம், இ.மகேந்திரன், மு.இராமநாதன். க. கிருபாநிதி ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (32'33)

## கிணற்றில் விழுந்து மரணம்

தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த வேளையில் தவறுதலாகக் கிணற்றுக்குள் விழுந்த ஒருவர் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்ற போது அங்கு மரணமானார்

சுதுமலை அண்ணாமலை வீதியைச் சேர்ந்த வித்துவான் நயினார்சாமி என்பவரே இச்சம்பவத்தில் மரணமானவராவர்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப் படும்.

● 1. சைவ சித்தாந்தத்தில் பேராசிரியர் (அறக்கொடைத்தவிசு)

●● 2. உடலமைப்பியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்11/ விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர்.

●●● 3. சட்ட மருத்துவத்தில் உதவி விரிவுரையாளர்.

4 மகப் பேற்றியலும் மாதர் நோயியலும்/ மன நோயியல் அறுவை மருத்துவத்தில் செய்முறை காட்டுநர்.

5. ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம்111

●●● 6. உடற்கல்விப் பணிப்பாளர்

குறிப்பு:

●● 1 உடலமைப்பியல் சிரேஷடவிரிவுரையாளர்தரம் 11/ விரிவுரையாளர்/ உதவிவிரிவுரையாளர் பதவிக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்க முடியும்.

(அ)மிருக வைத்தியமாணி அல்லது பல் அறுவைச் சிகிச்சை மாணியும் இதரபட்டப் பின்படிப்புத் தகைமைகளும், உயர் தொழில் தகைமைகளும் உள்ளவர்கள்.

●●● 2. இரசாயனவியலில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்துடன் பௌதிகவியலைத் துணைப் பாடமாகக் கொண்டுள்ள அல்லது பௌதீகவியலில் இரசாயனவியலைத் துணைப் பாடமாகக்கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் பரிசீலனைக்கு எடுக்கப் படும்.

சம்பள அளவுத்திட்டம்:

பேராசிரியர்:
ரூபா 12,200—6X300—14,000/—
(மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11:
ரூபா 8,000—5×250—9,250/—
(மாதமொன்றுக்கு)

விரிவுரையாளர் (மருத்துவம்)
ரூபா 4,500—10× 200. 6500/
(மாதமொன்றுக்கு)

(மருத்துவபீட விரிவுரையாளர் ஒருவர் முதலாவது நியமனத்தின்போது ரூபா 4,500/— சம்பளத்திற்கு இரண்டு படிகள் அதிகமாக, அதாவது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 4.900/— ரூபாவில் வைக்கப்படுவார்.)

உதவி விரிவுரையாளர்:
ரூபா 3,900/— மாதமொன்றுக்கு
(நிலையானது) ஆண்டொன்றுக்கு.

செய்முறை காட்டுநர்:
ரூபா 3,250/— மாதமொன்றுக்கு

போதனாசிரியர் தரம் 111
ரூபா 3,000—6 × 80—3,480/—
(மாதமொன்றுக்கு)

உடற்கல்விப் பணிப்பாளர்:
ரூபா 6,000—10×200—8,000/— (வினைத் திறமைகாண் தடை).
ரூபா 8,250—7×250—10,000/—
(மாதமொன்றுக்கு)

பேராசிரியர் பதவிக்கு (அறக்கொடைத்தவிசு) விண்ணப்ப முடிவுத்தேதி 1990 ஆகஸ்ட் 7 ம் திகதி ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத்தேதி 1990 யூன் 08-ம் தேதி ஆகும்.

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். பேராசிரியர், அறக்கொடைத்தவிசுப் பதவிகளுக்கு விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/— முத்திரை ஒட்டப்பட்ட 23×10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23×10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப் படுவர்.

குறிப்பு:

● 1. சைவசித்தாந்தப் பேராசிரியர் (அறக் கொடைத்தவிசு) பதவிக்கான நியமனம் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமாக இருக்கும்.

●● 2. உடற் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990—05—10

05107

# காரைநகரில் சித்திரத்தேர் வெள்ளோட்டம்

காரைநகர் மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை புதன்கிழமை காலை 6மணிக்கு நடைபெறும்.

இந்த சித்திரத் தேர் திருநெல்வேலி ஸ்தபதி 'சிற்பகலா ,மணி', 'சிற்பகேசரி', 'சிற்பரத வித்தகர்' ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியாரினால் நிர்மாணிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### "சிரித்திரன் சித்திரக் கொத்து" நூல் வெளியீடு

# சமூகத்தில் நாறிக் கிடந்த அசுத்தங்களை துணிவுடன் தூக்கிஎறிய முயன்றேன் - சுந்தர்

யாழ்ப்பாண மண்ணிற்கு நகைச்சுவை மூலம் பெருமை தேடித்தந்த திரு.சி.சிவஞானசுந்தரத்தின் (சுந்தர்) சிரித்திரன் சித்திரக் கொத்து'' நூல் வெளியீட்டு விழா அண்மையில் நல்லை ஆதீன மண்டபத்தில் இடம் பெற்றது.

அவரது நகைச்சுவையாற்றல்களை இனம்கண்டு பயன் பெற்ற பல சிரித்திரன் ரசிகர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டனர். இனிமையான மாலைவேளையில் சிரித்திரன் மூலம் பெற்ற இன்ப அனுபவங்களை அசைபோட்டபடி ரசிகர்கள் கலந்து கொண்டனர்.

திரு.பொன் பூலோகசிங்கம் தலைமையில் இடம் பெற்ற இவ் விழாவை மில்க் வைற் அதிபர் திரு. க, கனகராசா மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

நூலாசிரியர் சுந்தருக்கான வாழ்த்துப்பாவை இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் இசைவடிவில் இனிமையாக வழங்கினார். இவரது வாழ்த்துப்பா குரல் வளத்தினால் ரசிகர் மனதில் நிலைத்துவிட்டது. பின்னர் இடம்பெற்ற வாழ்த்துரைகள் வழங்கும் நிகழ்ச்சியில்

**நல்லை ஆதீன முதல்வர்**

''மனித வாழ்விலே மனித தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்த சிறந்த மனிதர் இவர். இளைஞர் முதியவர் என்ற பாகுபாடு இன்றிச் சகலரையும் நகைச்சுவை மூலம் திசை திருப்பியவர். அவருடைய சிந்தனைப் போராட்டத்தை ஆக்கங்களில் காண்கின்றோம். இவர் நீண்டகாலம் வாழ்ந்து பணியாற்ற இறைவனைப் பிரார்த்திப்போம்'' என்று தெரிவித்தார்.

**அருட்தந்தை ஜெராட் சவரிமுத்து**

''இவர் வித்தியாசமான கலையை உணர்ந்த மாமனிதர். புதிய கோணத்தில் நகைச்சுவை மூலம் எம் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பியவர். மனிதநேயம், ஜீவாதாரணியம் இவரது உள்ளத்தின் உணர்வுகளாகும்.. இவர் சமுதாயத்தைத் தட்டியெழுப்பிய மனத் தாழ்ச்சியுடைய கலைஞனாகும்'' என்றார்.

**மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம்**

திரு. சுந்தர் மற்றைய படைப்பாளிகளைவிட வித்தியாசமானவர்.இவரது படைப்புகள் இதனை எடுத்துக் காட்டுகின்றன. இவரது படைப்பு அறிவுடையோர் மட்டத்திற்கு மட்டுமல்லாமல் சகல மட்டங்களுக்கு மேற்றதாக இருப்பது சிறப்பானதாகும்'' என்று குறிப்பிட்டார்.

திருசுந்தரின் விருப்பத்திற்கிணங்க வாழ்த்துரைகள் முடிவடைந்ததும் செல்வி கனகாம்பரி பத்மநாதனின் இன்னிசை விருந்து சிறப்பாக நடைபெற்றது.

வரவேற்புரையைப் பத்திரிகையாளர் திரு.க. அரசரத்தினம் வழங்குகையில் ''அவர் தமிழ் மண்ணையும், மொழியையும் நேசித்த காரணத்தினாலே தமிழ் மக்களுக்காக நெருக்கடி மத்தியில் பணியாற்றினார், இவரது திறமை மக்களை விழிப்படையச் செய்தது'' என்றார்.

திரு.பொன். பூலோகசிங்கம் தலைமையுரை நிகழ்த்தும்போது ''தமிழிலே கருத்தோவியம், காட்டூன் நிரம்பிய நூல் என்றால் சிரித்திரன் மட்டுமே. இது அவரின் 25 வருடகால பணியின் சிறப்பாகும். காலத்துக்குக் காலம் காலத்திற்கேற்ற நகைச் சுவைகளை இவர்தந்தார். எழுத்துக்கள் இன்றி கருத்துக்களை வெளியிடுவது இவரது தனித் திறமையே'' என்றார்.

கட்டைவேலி பல.நோ.கூ. சங்க உபதலைவர் திரு செ. சதானந்தன் நூல் வெளியீட்டுரை நிகழ்த்தும் போது ''தமிழரின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் இந்த நூல் வெளியிடுவது எவ்வளவோ சிறப்பான தொன்றாகும். அவரது சமுதாயச் சிந்தனைகள் நூலுருவில் வெளிவருவது எம்பாக்கியமே'' என்று சிறப்பித்தார்.

இந்த நூலில் சிறப்புகள், நோக்கங்கள், அமைப்புக்கள், அர்த்தங்கள் பற்றிய கருத்துரை வழங்கும் நிகழ்ச்சியில்:

**பேராசிரியர் கா. சிவத்தம்பி**

''ஈழத்துத் தமிழ் சஞ்சிகைகளுள் வரலாற்றுச் சிறப்பு மிக்கது சிரித்திரன். யாழ்ப்பாண மக்களின் நகை உணர்வின் சின்னமாக சிரித்திரன் விளங்குகின்றது. எங்கள் குறைகளை வைத்து எங்களையே சிரிக்க வைக்கும் தனித்திறமை அவரிடமே உண்டு. நகைச்சுவையுணர்வு இழையோடுகின்ற ஜனநாயக பண்புடைய அமைப்பிற்கு சிரித்திரன் சிறந்தோர் எடுத்துக்காட்டாகும்.''

''காழ்ப்புணர்ச்சி நெஞ்சில் இன்றி நகையுணர்வுடன் சிறப்பான கருத்தோவியம் படைத்தவர் இவர்.வாழ்க்கையின் சகல மட்டங்களையும் சமுதாயத்தின் சகல ஏற்ற இறக்கங்களையும் நன்றாகப்புரிந்த நகைச்சுவ்யாளர் இவர்'' என்று சுந்தரின் திறன்களை எடுத்துக் கூறினார்.

**பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம்**

இவர்எமது நாட்டில் பிறந்தது எமக்கு அதிர்ஷ்டம் ஆனால் அவருக்கு துரதிர்ஷ்டம் இவரது சேவை மகத்தானது என்று சிறப்பித்துக் கூறினார்.

**கலாநிதி நா. சுப்பிரமணியன்**

''ஓய்ந்திருக்கும் ஜோதியின் கை மீண்டும் எழ வேண்டும். மீண்டும் சிரித்திரன் வெளிவர யாவரும் முன் நடவடிக்கையெடுக்க வேண்டும். சமுதாயத்தின் பிரதான தேவைகளில் இதுவும் ஒன்று'' என்று குறிப்பிட்டார்.

**தீககவயல சி.தர்மகுலசிங்கம்**

''எந்த வொருஎழுத்தாளனையும் விட இவருக்கு சிறப்புச்சக்தியுண்டு இந்த நாட்டிற்கு நம்பிக்கையைக்கொடுத்தவர் இவர். நகைச் சுவை மூலம் இவர் மக்களை வழிப்படுத்தினார்' என்று சிறப்பித்துப் பேசினார்.

**செங்கை ஆழியான்**

''இலக்கியப் பணியை சிறப்பாக செய்தமாமனிதர் எமது பாரம் பரிய விழுமியங்கள் அழிக்கப்படுவதை விரும்பாதவர். கலாசாரச் சீரழிவுகளை நகைச்சுவை மூலம் மக்களுக்கு கொடுத்து நல்வழிப்படுத்தியவர் இவர் என்று தெரிவித்தார்.

**க. உமாமகேஸ்வரன்**

''ஈழத்தமிழரின் கலாசார பண்பாட்டுச்செல்வம் சிரித்திரன்.பிறருடைய ஆற்றல்களை நன்றாக ரசிப்பவர் இவரது ரசனைமிகமிகவிசாலமானது. இவருடைய நகைச்சுவை சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருப்பது சிறப்பாம்கு'' என்று புகழ்ந்துரைத்தார்.

**அகளங்கன்**

''தனது மனஉறுதியை விட்டுக்கொடுக்காத காரணத்தினால் திரு. சுந்தர் பலசோதனைகளைத் தாங்கி வந்தார். என்றைக்கும் அவரது மன உறுதியில் ஆட்டம் ஏற்படவில்லை'' என்று சிறப்பித்தார்.

**சித்தாந்தக் கலாநிதி க. கணபதிப்பிள்ளை**

''சிந்தனை விவேகம் இரண்டும் சேர்ந்த கலைஞனே சுந்தராகும் இவருடைய ஒவ்வொரு நகைச்சுவையிலும் ஆழமானஅர்த்தங்கள் புதைந்துள்ளன'' என்றார்.

நூலாசிரியர் திரு.சிவஞானசுந்தரத்தின் பதிலுரையை அகளங்கன் வாசித்தார் தனது பதிலுரையில் திரு சுந்தர் தெரிவித்ததாவது, ''நான் சமூகத்தில் நாறிக் கிடந்த எல்லா அசுத்தங்களையும் துணிவுடன் தூக்கி எறிய முயன்றேன்''

''என்னைப்பொறுத்தவரை என்னால்முடிந்தளவு சமுதாய அசுத்தங்களைத் தூக்கி எறிந்தேன் எனதுபணி எனக்குப் பூரணதிருப்தியைத் தந்தது, இன்னும் சமுதாயத்திற்கு பணிசெய்ய வேண்டும் என்பது என் இலட்சியம்'' என்று குறிப்பிட்டார்,

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட திரு, திருமதி அன்ரன் பாலசிங்கம் திரு சுந்தரருடனும் அவதுபாரியாருடனும் அளவளாவிச் சென்றனர், அன்ரன் பாலசிங்கம் சிரித்திரனின் ஆரம்பகால ரசிகனாகும்

வைத்தியகலாநிதி இந்திரா நாகநாதன் நூற்பிரதிகளை வழங்கினார் முதற்பிரதியை திரு, இ முத்துத்தம்பி பெற்றார்விழாவில்நன்றியுரையை திரு. எஸ். சிறீஸ்கந்தரா ஜா வழங்கினார்.

தொகுப்பு:
எஸ். ராஜ்மோகன்

# நெசவுப் பயிற்சிக்கு விண்ணப்பிக்காலம்

(தாளையடி)

யாழ்பாணம் நல்லூர் நெசவுப் பயிற்சிப்பாடசாலைக்கு 1990- 1991-ம் பயிற்சி ஆண்டுக்குமாணவ, மாணவிகளைச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பயிற்சிக்கு விண்ணப்பிப்போர் 18-25 வயதுக்குட்டவராகவும் க. பொ. த. சாதாரணதரப்பரீட்சையில் கணிதம் தமிழ் உட்பட ஆறு பாடங்ளில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

பயிற்சியாளருக்குப் நாளொறிற்கு 15ரூபா வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 1990. 05. 15. ம் திகதிக்கு முன் அதிபர் நல்லூர் நெசவுப் பாடசாலை 194,அரசடி வீதி நல்லூர் யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். (18)

# நாவாந்துறையில் 'புனித கிறிஸ்தோப்பர்'

மெலிஞ்சிமுனை கலைக்குரிசில் நாடக கலா மன்றம் வழங்கும் 'புனித கிறிஸ்தோப்பர்' தென்மோடி நாட்டுக்கூத்து நாளை 16ம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்குநாவாந்துறை சென் மேரிஸ் முத்தமிழ் அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையபளர்கலாநிதிஇ.பாலசுந்தரம் இதன் தயாரிப்பு நெறியாள்ர்கைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை நிகழ்ச்சியில் பிரதம விருந்தினரரகக் கலந்து கொள்ளுவார்.

வறுத்தலைவிளான்

## புற்று நோயாளர் விடுதியில் இலவச அறிவியல் கண்காட்சி

தெல்லிப்பழை வர்த்தலை விளானிலுள்ள புற்று நோயாளர் விடுதியில் இம் மாதம் 18, 19, 20ம்திகதிகளில் புற்று நோய்க் கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது.

புற்றுநோய் பற்றி பொது மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் இந்தக் கண்காட்சி ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

தினமும் காலை 8மணிமுதல் மாலை 5 மணிவரை இக் கண்காட்சி நடைபெறும்.

இந்த இலவச காட்சிக்கு வருகைதரும் பார்வையாளர்களுக்கு குறைந்த செலவில் சிற்றுண்டி நற்பானங்கள் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்-கொழும்பு பஸ் பூணாவையில் கொள்ளை

கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்த தனியார் பஸ் வண்டியொன்று நேற்று அதிகாலை பூணாவையில் வைத்துக் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் பிரயாணிகள் தாக்கப்பட்டுள்ளதோடு பஸ்ஸிற்கும் பலத்தசேதம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்த பயணிகள் அநுராதபுரம் வைத்தியசாலையிலும் வவுனியாவைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## வாழ்க்கைச் செலவை குறைக்கக் குழு

வாழ்க்கைச் செலவை ஸ்திரப்படுத்தும் முகமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி பிரேமதாஸ அமைச்சர் மட்டக்குழுஒன்றை நியமித்துள்ளார் பிரதமர் விஜேதுங்கதலைமையிலானஇக் குழுவல் அமைச்சர்கள் லலித் மன்சூர் வீரசிங்க மல்லிமராச்சி தர்மதாஸ பண்டாரரூபா கருணாதிலக்கா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

### இறந்த...

தொடர்பாக ஒய்வூதியமோ. மரணப்பணிக்கொடையோ, விதவை அனாதைகள் ஒய்வூதியமோ, வழங்கப்படாததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இவ்விடயத்தை முடிவுக்குக் கொண்டுவர ஒவ்வொரு சபையும் ஒரு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை ஒய்வூதியப் பகுதிக்கு நியமித்து தேங்கிக் கிடக்கும் ஓய்வூதியம் மரணப் பணிக்கொடை, விதவை அனாதை ஒய்வூதியம் யாவற்றையும் ஜூன் 30ம் திகதிக்கு முன் தனது அங்கீகாரத்துக்கு அனுப்பி வைக்குமாறு வடகிழக்கு மாகாணசபை உள்துறை அமைச்சுப் பதில் செயலாளர் திரு. சி. பற்குணம் சுற்றறிக்கை மூலம் சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அறிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்குமாகாண சபை உள்ளூராட்சி சேவைத் திணைக்கள ஊழியர்களுக்கான ஒய்வூதிய நடவடிக்கை கைநூல் மாநகரசபை நகர சபை, பிரதேசசபைகள் என்பவற்றிற் கடமையாற்றும் ஊழியர்களுக்குவடக்கு கிழக்கு மாகாணசபை உள்ளூராட்சி சேவைத்திணைக்களபணிப்பாளரினால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது, (18)

### இன்ரசிற்றி...

மறுத்ததைத் தொடர்ந்தும் மற்றும் அநுராதபுரம் தொடக்கம் காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதுகாப்புக் கடவைகள் சீரற்ற நிலையில் இருப்பதாலும் இச்சேவைகள் நடைபெறமாட்டதெனத்தெரியவருகிறது.(33)

### சுற்றுலா...

சபைக் கூட்டத்தில் எடுக்கப் பட்டதாம்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலைப் பிரிவு மாணவ, மாணவிகள் சிலர் பல்கலைக்கழகத்தின் அனுமதி பெறாது கொழும்பிற்கு 3 நாள் சுற்றுலாப் பயணம் சென்றிருந்தனர். (05)

### பொருட்கள்...

யாழ் மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் வர்த்தகர்களும், வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா பேசுகையில்:

''எம்மால் வரி விதிக்கப் பட்ட பொருட்களுக்கு கூடிய வரியும், வரி விதிக்கப்படாத பொருட்களுக்கும் மக்களிடம் இருந்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதை பொது மக்கள் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது.

எனவே இது தொடர்பாக பொதுமக்கள் எல்லோரும் அறியக்கூடியதாக வரி விதிக்கப்பட்ட பொருட்கள், வரி விதிக்கப்படாத பொருட்கன் என வேறுபடுத்தி வரி விதிக்கின்ற பொருட்கள் சிவப்பு எழுத்துக்களாலும், உண்மையான விலையும், வரியினால் உண்டாக்கப்பட்ட விலையும் எழுதப்பட்டு விலைப் பட்டியல் தொங்கவிடப்பட வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களுக்கு வரி விதிப்பு இல்லை. ஆனால் மறைமுகமாக எமது பெயரைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கூட்டி விற்கப்படுகிறது.

பொருட்கள் நியாயமான விலைக்கு விற்கப்பட வேண்டும். இறக்குமதிப் பொருட்களின் விலை, கொழும்பு விலை அதிகரிக்கப்படுமாயின் எமது அனுமதியைப் பெற்றே யாழ் மாவட்டத்தில் விலை அதிகரிப்பு செய்யப் பட வேண்டும். மேலும் பொருட்களின் விலை அதிகரிப்புக்குக் காரணம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

வர்த்தகர்களிடமிருந்து இலாபத்தின் ஒருபகுதியையே நாம் போர் நிதியாகப் பெறப் படுகின்றது. ஆனால் அந்நிதி பொதுமக்களிடம் இருந்து அத்தியாவசியப் பொருட்களின் மேல் வரி சுமத்தி எமக்கு அவப் பெயர் ஏற் படுத்துகிறது.

முக்கியமாக எமதுபோராட்டத்திற்கு நிதிதேவை. அந்நிதியைப் பொதுமக்கள் தருவதற்கு சந்தோசப்படுகிறார்கள். ஆனால் வர்த்தகர்களின் மேலதிக சுரண்டல் நடவடிக்கையை மக்கள் வெறுக்கிறார்கள். இது தொடர்பாக நாமும் வேதனையடைகின்றோம்'' என்றார்.

### கால்நடையை...

இழந்ததுடன் மற்றைய காலிலும் படுகாயத்திற்குள்ளானார்.

இச்சம்பவம் நீராவியடிக் காட்டுப்பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றது. (4)

# சிறுபோக நெற் செய்கை வடக்கு கிழக்கில் பாதிப்பு

இவ்வருட சிறுபோக நெற் செய்கைக்கு வடக்குக்கிழக்குப் பகுதிகளில் பெருமளவு பாதிப்பு ஏற்படுமெனத்தெரிவிக்கப் படிகின்றது.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் தற்போது ஏற்பட்டுள்ள வரட்சியினால் சகல குளங்களிலும் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணத்தினால் இவ்வருட சிறுபோக நெற் செய்கை பாதிக்கும் என அஞ்சப் படுகின்றது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குளங்களிலும் இருந்தும் இம்முறை நெற்செய்கைக்காக குறிப்பிட்டளவு காணியே ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்முறை சிறுபோக நெற் செய்கை பாதிப்படையும் என்றகாரணத்தினால் கடந்த பெரும் போக நெற்களை விவசாயிகள் சந்தைக்கு அனுப்பாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது (03)





விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் காட்டு வாழ்க்கையின் போது அவரது இருப்பிடத்திற்கு அருகில் போடப்பட்ட 250கிலோ நிறையுடைய பெரிய விமானக் குண்டொன்றை படத்தில் காண்கிறீர்கள் இக்குண்டுகள் விழுந்து வெடித்த இடங்களில் பாரிய கிணறுகள் உண்டாகியிருப்பது குறிப் பிடத்தக்கது.

வெடிக்காத இப் பெரிய குண்டு தற்பொழுது கோண்டாவிலில் உள்ள விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கீழே அக்குண்டுடன் 12 வயது சிறுவன் ஒருவன். பாவம் சிறுவன். உயரத்தில் குண்டு சிறுவனை மிஞ்சிவிட்டதே

## பயிலுநர் ஆசிரியர் மீள்பரிசீலனை குழுவில் வி. புலிகள் உறுப்பினர்

யாழ் மாவட்ட பயிலுநர் ஆசிரியர் பதவிக்காக விண்ணப்பித்த சகலரது விண்ணப் பங்களுக்குமான மீள் பரிசீலனை நடவடிக்கை ஆரம்ப மயகவுள்ளது.

விடுமுறையில் வெளிநாடு சென்றிருந்த பயிலுநர் ஆசிரியர் தெரிவுகளுக்குப் பொறுப் பான யாழ் கல்வித்திணைக்கள அதிகாரி தற்போது நாடு திரும்பியுள்ளார் இவரது வருகைக்காகவே மேற்படி மீள் பரிசீலனை ஒத்திவைக்கப் பட்டிருந்தது தெரிந்ததே

விரைவில் ஆரம்பமாவுள்ள மீள் பரிசீலனையில் மேற்படி ஆசிரியர் தெரிவில் இடம் பெற்ற மோசடிகளைத் கண்டுபிடிக்க ஐந்துபேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இக் குழுவில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதி ஒருவரும் நியமிக்கப்படலாம்

பயிலுநர் ஆசிரியர்களாகத் தற்போது கடமையாற்றுபவர்கள் மற்றும் இரண்டாம் பட்டியலில் விடுபட்டோர் உட்பட சகலருக்கும் இந்த மீள் பரிசீலனை இடம் பெறும்.

### பாதிக்கப்பட்ட ..

ஆலோசகர் அலுவலகத்திலும், பீடாதிபதிகள் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வருமான ஆதரவுத்திட்டம், இனமுறை, வன்செயல், கலவரங்களால் மரணம் அல்லது காயம் ஏற்பட்டிருப்பின் அவற்றின் பொருட்டே இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் கொடுப்பனவுகள் செய்யப் படும்.

மணமாகிய ஒருவர் மரணமாயின் 50,000 ரூபாவும், மணமாகாத ஒருவர் மரணமாயின் 25,000 ரூபாவும், வயதாகாத சிறுவர் ஒருவர் மரணமாயின், 15,000 ரூபாவும், காயமுற்ற வளர்ந்த ஒருவருக்கு அவருடைய உழைக்கும் வலு எத்தனை வீதம் இழக்கப்பட்டதென அரசு வைத்திய அலுவலர் ஒருவர் தரும் அத்தாட்சிக்கு ஏற்ப 15,000 ரூபாவரை என்றும்,

மரணம், காயம் தொடர்பான விண்ணப்பங்கள் உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்றும், மேலும் விபரங்கள் தேவைப்படின், சிரேஷ்ட மாணவ ஆலோசகருடனோ அல்லது பீடாதிபதிகளுடனோ தொடர்பு கொள்ளும்படியாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய விபரங்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் தமக்கு அனுப்பி வைத்துள்ளதாக யாழ் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு.முருகையன் தெரிவித்துள்ளார் (04)

### அரசு

ரட்னவும் நீதியமச்சர்ஜனாது ஏ. சி. எஸ் ஹமீத்தும் கலந்துகொள்வர்.

ஈ. பி, ஆர், எல். எவ் தரப்பில் பிரேமச்சந்திரன் தலைமையில் நிதியமைச்சர்கிருபாகரன், யோகசங்கரி, எம், பி, அபுயூசுப் வீ. ஏ. கந்தசாமி ஆகியோர் பேச்சுக்களில் கலந்து கொள்ளவுள்ளனர்.

### வடகிழக்கு...

குறை பெருமளவு நிலவுகிறது. இதை நிவர்த்தி செய்யும் முகமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்படவிருக் கிறது.

தற்போதைய சேவையில் பத்து வருடங்களைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கே இத்திட்டத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

இதே வேளை பட்டதாரி ஆசிரியர்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படமாட் டார்கள் எனத்தெரிய வருகிறது.

மாகாண உட்துறை அமைச்சினால் இதற்கான திட்டங்கள் திரட்டப்பட்டு வருவதாக மேற்படி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பட்டதாரிகளாக இருந்தும் தமதுகல்வித் தகைமைக்கேற்ப தொழில்களில் அமர்த்தப் படாது எழுதுவினைஞர் போன்ற தொழில்களை ஆற்றிவரும் பட்டதாரிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் நன்மை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (5)


## விற்பனைக்கு

பாக்குச் சீவல்

மொத்தமாகவும், சில்லறையாகவும் குறித்த ஓடர்களுக்கு கொடுக்கப்படும்.

**விபரங்களுக்கு:**

ஆ. பாலகிருஷ்ணா
பிள்ளையார் கோவிலடி,
களபூமி
காரைநகர்.

05113


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் சிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ம இலக்கத்திலுள்ள அச்சகப்]பிரிவில் 15.05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது